RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd223S114

# Lifestyle that is Shared by "Silasaasanam"

## சிலாசாசனம் பகரும் வாழ்வியல்

**S.P. Salavanisree** [a,*]

[a] Department of Tamil, Shri Krishnaswamy College for Women, Chennai-600040, Tamil Nadu, India.

*Corresponding author Email: salavanisree@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd223S114

Received: 13-04-2022; Revised: 11-07-2022; Accepted: 24-07-2022; Published: 19-08-2022

**Abstract:** Inscriptions found in the temples of Tamil Nadu help us to understand the ancient culture and lifestyle of the Tamils as well as how the literature and archaeological records can be used to understand the same. Inscriptions in temples are a source of global discussion and Tamil religion's contribution to Asian culture. There is also a word for a stone called "Silai" (idol). A notification is called an 'Uttharavu Saasanam' (charter). Hence, the inscription is also called Silasaasanam (Silai+Saasanam = Silasaasanam). Based on the data found in the inscriptions of the temples found in the Ponneri circle, the study of the necessity of the religious needs between the temples and the social organisations associated with them becomes the field of study. The inscriptions present the existence of this temple through the History of Inscriptions, Inscription Literature, Religion through Inscriptions, Ponneri Circular Inscriptions, the Lighting of Lamps in Temples, Penalties, Offerings, and Worship Expenses, Grants for Special Worships, Wages to Employees, Taxes, Dance Women's Contributions, and Special Treatises.

**Keywords:** Silasasana, Inscription, Sangam literature, Ponneri, Culture

**Language:** Tamil

## முன்னுரை

தமிழர்களின் தொன்மையினைப் பண்பாட்டினை, வாழ்வியலை அறிந்துக் கொள்ள இலக்கியங்களும் அகழாய்வுக் குறிப்புகளும் எவ்வாறு பயன்படுகின்றதோ அவ்வாறே தமிழக கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளும் உதவுகின்றன. கோயில்களில் இடம்பெறும் கல்வெட்டுகள் உலக அளவில் பேசப்படும் ஒரு ஆதாராமாகத் திகழ்வதுடன் ஆசியப்பண்பாட்டிற்கு தமிழ்ச் சமய பங்களிப்பாகவும் அமைகின்றது எனலாம்.

பழங்காலத்து எழுத்து ஆவணமாகக் கருதப்பட்டதில் கல்வெட்டு முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்கல்வெட்டுகளில் மன்னர்கள் மக்கள் சமூகத்திற்கு வழங்கிய ஆணைகள், கொடைகள் போன்றவையும் வீரர்கள், மன்னர்களின் முதன்மை அதிகாரிகள், பொது மக்கள் போன்றோர் மக்களுக்காக அல்லது சமூக கட்டமைப்பின் தேவைக்காகச் செய்த நிகழ்வுகள் இடம் பெற்றன. கல்வெட்டுகளில் இடம்பெறும் செய்தி சமூதாயத்தின் தேவையாக இருப்பதால் பெரும்பாலும் அவை கோயில்கள் மற்றும் கோயில் சார்புடைய கட்டிட அமைப்புகளில் அமையும் படி செய்தனர் நம் முன்னோர். கல்லைக் குறிக்கச் சிலை என்ற ஒரு சொல்லும் உண்டு. அறிவிக்கும் செய்தி அல்லது உத்தரவு சாசனம் எனப்படும். அதனால் கல்வெட்டைச் சிலாசாசனம் எனவும் கூறுவர் (சிலை+சாசனம்=சிலாசாசனம்).

இங்கு பொன்னேரி வட்டத்தில் காணப்படும் கோயில்களின் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் கோயில்களுக்கும் அவைச் சார்ந்தச் சமூக அமைப்புகளுக்கும் இடையேயான சமயத் தேவைகளின் அவசியத்தை அக்கல்வெட்டுகள் வழி நோக்குவது ஆய்வுக் களமாகின்றது (Mahalingam, 1991).

## கல்வெட்டுகளின் வரலாறு

கல்வெட்டுகளின் வரலாற்றுப் பதிவு தொல்காப்பிய காலம் முதல் நமக்கு கிடைக்கும் ஒரு பண்பாட்டு தொடர்புடைய ஆதாரச் சன்னமாகும். போரில் வீர மரணம் தழுவிய வீரர்களுக்கு கல்லெடுத்தும் அக்கல்லில் அவ்வீரர்களின் சிறப்புச் செய்தியினைப் பொறிப்பதும் பண்டையச் சமூக அமைப்புகளில் காணப்பட்டது. இவ்வாறு தோன்றிய நடுகற்கள் பின் நாளில் கல்வெட்டாக வளர்ச்சி பெற்றது. பல்லவ மன்னர்களின் காலத்தில் உருப்பெற்ற கல்வெட்டு பின் சோழர் மற்றும் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் வளர்ச்சி பெற்றதுடன், தமிழகத்தினை ஆட்சி செய்த பிற மொழி பேசும் மன்னர்களிடமும் அவை தாக்கத்தினை ஏற்படுத்தி அவர்களும் கல்வெட்டினை அமைத்தனர். அவை மன்னர்களின் கால வரலாற்று ஆவணமாகத் திகழ்கின்றது.

மிகப் பழங்கால வரலாற்றுச் செய்திகளின் நம்பத் தகுந்தச் சான்றாதாரமாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. கல்வெட்டுகள் எழுதப்பட்ட மொழி அமைப்பு, எழுதியவர்கள், யாரால் அவை எழுதுவிக்கப்பட்டது போன்ற தரவுகளையும் அவை தருகின்றது.

தொடக்க கால வட்டெழுத்து கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் சிறிது சிறிதாகத் தமிழ் நாட்டில் வழக்கிழந்து பின் இன்றைய தமிழ் எழுத்துகளின் வரிவடிவிலும் எழுதப்பட்டன. கொடை கொடுத்தவனின் நாடு, ஊர், முதலிய தரவுகளும் அவன் குடிப் பெயர்களும் பின்னர் அவனுடைய பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும்

## சிற்ப எழுத்தும் இலக்கியமும்

சிற்ப எழுத்தாகப் போற்றப்படும் கல்வெட்டுகளின் அழியாத் தன்மையினையும், உண்மை நிலைப்பாட்டினையும் இலக்கியங்கள் பேசுகின்றன. ஔவையின் மூதுரையில்

"நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்

கல்மேல் எழுத்துப் போல் காணுமே"

நல்லவர்களுக்கு செய்யும் உதவி கல்லின் மேல் எழுத்தைச் செதுக்குவது போன்றது; அது என்றும் நிலைத்திருக்கும் என்று ஔவைப் பிராட்டி கூறியிருப்பது கல்வெட்டுகளுக்கு மக்கள் அளித்த உயர்வைத் தெள்ளிதின் தெரிவிக்கின்றது (Venkatasamy Nattar, 2018). இதனை,

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'

என்னும் முதுமொழி கல்எழுத்தின் ஆயுட் காலச் சிறப்பினையும் உண்மை தன்மையினையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது (Venkatasamy Nattar, 2018).

## கல்வெட்டு பேசும் சமயம்

கி. பி ஆறாம் நூற்றாண்டுக்கு பின்னர் கற்கோயில்கள் தோற்றம் மகேந்திரவர்மன் காலத்தில் இருந்து தொடங்குகின்றது. அதன் பின்னர்தான் கோயில் கல்வெட்டுகளின் வளர்ச்சியும் ஆரம்பமாகின்றது. கல்வெட்டுகள் இரு நிலைகளில் நமக்கு கிடைக்கின்றன. 1.குகைக் கல்வெட்டுகள் 2. கோயில் கல்வெட்டுகள். இறை மீது மக்கள் கொண்டிருக்கு நம்பிக்கை மற்றும் பக்தி அடிப்படையில் கோயில் கல்வெட்டுகளில் மன்னனின் ஆணைகள் இடம்பெறுவதுடன் கோயில் தமிழ் சமூக அமைப்பில் அனைவரும் கூடும் இடமாகவும் இருந்ததால் இங்கு பொறிக்கப்படும் செய்தி அனைத்து பிரிவு மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் ஒரு தகவல் பரிமாற்றக்களமாகவும் இருக்கின்றது. அம்பலத்தில் வரும் செய்தியில் யாரும் திரிபினை ஏற்படுத்த வாய்ப்பு இல்லாமல் உண்மைத் தன்மையினையும் உறுதிப்பாட்டையும் இக்கல்வெட்டுகள் பறைசாற்றுகின்றன (Mahalingam, 1991).

உடல் வளத்திற்கு உணவும், மன வளத்திற்கு கல்வி அறிவும் எவ்வாறு தேவையோ அவ்வாறே உயிர் வளத்திற்கு சமயம் இன்றியமையாதத் தேவையாகின்றது. சமய நிறுவனங்களாகக் கோயில்கள் செயல்பட்டதால் கோயில் சார்புடைய தரவுகளின் இருப்பிடமாக அவை திகழ்ந்தன. மேலும் மக்கள் இறை மீது அச்சமும் பக்தியும் கொண்டிருந்ததால் கல்வெட்டு தரவின் மீது மிகுந்த கவனம் செலுத்தி போற்றிப் பாதுகாத்தனர்.

## பொன்னேரி வட்ட கல்வெட்டுகள்

தமிழகத்தில் கற்றளிகள் தோன்றிய காலகட்டத்தில் தமிழ்ச் சமூக அமைப்பு அதன் செயல்பாடுகள் அனைத்தும் கோயில், கோயிலைச் சுற்றி அல்லது கோயிலைத் தொடர்புப்படுத்தி அமைந்தன எனலாம். இங்கு பொன்னேரி வட்டப் பகுதிகளில் காணப்படும் கோயில் கல்வெட்டுகளில் பொதுவாக இடம் பெறும் தரவுகளுடன் பல சிறப்புத் தரவுகளும் காணப்படுகின்றன. இத்தரவுகள் அனைத்தும் பெரும்பான்மை தமிழ் மொழியிலும் சிறுபான்மை கிரந்த மொழி மற்றும் சமஸ்கிருத மொழியிலும் காணப்படுகின்றது. இவை 9ஆம் நூற்றாண்டு முதல் 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த மன்னர்களின் ஆட்சி காலத்தைச்சேர்ந்தவை ஆகும்.

பொதுவாக ஒரு முழுமையான கல்வெட்டு மங்கலச் சொல், மெய்க்கீர்த்தி, அரசன் பெயர், ஆண்டுக் குறிப்பு, கொடை கொடுத்தவர், கொடைச் செய்தி, சாட்சி, காப்புச் சொல், எழுதியவர் போன்ற பகுதிகளைக் கொண்டிருக்கும். இவை போன்ற தகவல்கள் பொன்னேரி வட்ட கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளது. ஆனால் கல்வெட்டின் சில இடங்கள் முழுமையாகக்

கிடைக்காமல் துண்டுகளாகவும், சிதைந்த நிலையிலும் அமைந்துள்ளது. மேலும் இக்கல்வெட்டுகள் பல்லவ மன்னர், சோழ மன்னர் ஆட்சிக் காலத்திற்கு உட்பட்டது. வெகுசில கல்வெட்டுகள் தெலுங்கு மன்னர்களைப் பற்றிய தரவுகளையும் தருகின்றது. கற்கோயில்களின் வாயில் நிலைகள், சுவர்கள், தூண்கள் மேல் விதானங்களிலும் கல்வெட்டினை அமைத்துள்ளனர் (Mahalingam, 1991).

## கோயில்களில் விளக்கேற்றல்

பண்டையக் காலத்தில் இரவு நேரங்களில் விளக்கேற்றப் பெரும் செலவு பிடித்ததால் கோயிலுக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட்களில் விளக்கும், எண்ணெயும் முதன்மை இடத்தினைப் பெறுகின்றது. பொன்னேரி வட்டத்தில் கிடைக்கும் கல்வெட்டுகளில் பெரும்பான்மையில் கோயில் விளக்குக்கும் அதற்குப் பயன்படும் எண்ணெய்க்கும் கொடை வழங்கப்பட்டதாகத் தரவுகள் கிடைக்கின்றன.

கோயில் நிலங்களைப் பயன்படுத்தும் வாடகைதாரர்கள் கோயிலுக்கு ஆண்டு முழுவதும் எண்ணெய் வழங்க வேண்டும் என்னும் ஒப்படைப்பு செய்தி ஒரு கல்வெட்டின் வழிஅறியப்படுகின்றது.

பல இடங்களில் கோயில் விளக்குக்கும் எண்ணெய்க்கும் பொன்னும் நிலமும் பணமும் மட்டுமன்றி ஆடுகள், பசுக்கள் மற்றும் எருமைகள் கொடையாகப் அளிக்கப்பட்டுள்ள செய்தி பரவலாக உள்ளது. மேலும் தங்க விளக்குக்கும் விளக்கு இருக்கையும் வழங்கப்பட்டுள்ளத் தரவும் கிடைக்கின்றது. எப்பொழுதும் அணையாமல் கோயிலில் தொடர்ந்து எரியும் நந்தா விளக்கிற்கும் நிரந்தர விளக்கிற்கும் இக்கொடைப் பொருள்கள் பயன்பட்டுள்ளன. இக்கொடைப் பொருட்கள் அனைத்தும் மன்னர், சாதாரண குடிமகன், மகளிர், ஆடு மேய்க்கும் இடையன், வணிகன் என பல்வேறு தரப்பு மக்களால் பெறப்பட்டுள்ள தரவுகளில் இருந்து அக்காலச் சமூகத்தில் கோயில்கள் ஒரு சமய நிறுவனமாக மட்டுமன்றி குடி மக்களுக்கு வாழ்வியல் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் சமூக நல்லிணக்க அமைப்பாகவும் செயல்பட்டுள்ளதை நோக்கலாம் (Mahalingam, 1991).

## அபராத செய்தி

கல்வெட்டு ஒன்றில் கிராமசபையில் அபராதம் விதிக்கப்பட்டு அந்தத் தொகை கோயில் விளக்குக்கு எண்ணெய் வாங்கப் பயன்படுத்தப்பட்டதுடன் கோயிலில் உள்ள முரசறைவோனுக்கு மானியமும் கொடுக்கப்பட்டச் செய்தி பெறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து மக்கள் இறைக்கு கொடுத்த முக்கியத்துவமும், கோயில்களையே வாழ்வின் நிலைக்களனாகக் கொண்டு செயல்பட்டமையும் புலனாகின்றது.

## பிரசாதம் மற்றும் வழிபாடு செலவுகள்

கோயிலின் வழிபாட்டு செலவுக்கும் பிரசாதம் வழங்கும் செலவுகளுக்கும் பல்வேறு கொடைகள்

வழங்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கல்வெட்டில் 2520 குழி நிலம் பரிசாக வழங்கப்பட்டதும் இது மன்னனின் மூன்றாம் ஆண்டு ஆட்சி காலம் முதல் அமலுக்கு வரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு வழிபாட்டுக்கு நிலம் வாங்கப்பட்ட மற்றும் விற்கப்பட்டச் செய்தியும் காணப்படுகின்றது. மேலும் பிரசாதம் வழங்குவதற்கும் 200 பணம் வழிபாட்டிற்கு கொடையளிக்கப்பட்டுள்ளது. இச்செய்திகளில் இருந்து பண்டைய மக்கள் கோயில்களின் தேவையினைப் பூர்த்தி செய்வது தங்களின் வாழ்வியல் கடமையாக எண்ணி வாழ்ந்தது பெறப்படுகின்றது.

## சிறப்பு வழிபாடுகளுக்கு கொடை

சிறப்பு வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளது. கோயிலுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலத்தினை ஏலத்திற்கு விற்று அந்தத் தொகையினைக் கோயில் சிறப்பு வழிபாட்டிற்குப் பயன்படுத்தியுள்ளனர். இறைச் சேவைக்காக நெல்லினையும் வழங்கியுள்ளனர்.

மேலும் புன்செய் நிலங்களைச் சீர்ப்படுத்தி விவசாயம் செய்து கோயில் திருவிழாக்களான ஐப்பசி விசு, சித்திரை விசு, மாசி மகம், கிரகண வழிபாடு, சங்கராந்தி போன்ற சிறப்பு வழிபாடுகளை ஊர் நலனுக்காகவும் அரசி தந்திபிராட்டியாரின் நலனுக்காகவும் செய்துள்ளதில் இருந்து விழாக்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் வெளிப்படுகின்றது.

மேலும் ஒரு கல்வெட்டில் மார்கழி திருவாதிரை திருவிழாவிற்குப் பொருட்கள் வழங்கப்பட்ட செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு சித்திரை மாத திருவிழாவிற்கானத் தொகையினை நகை ஆசாரி கொடுத்துள்ளதும் தெரிகின்றது

## பணியாளர்களுக்கான ஊதியம்

கோயிலுக்குப் பரிசாக வழங்கப்பட்ட நிலத்தின் நெல்லைக்கொண்டு கோயில் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. கோயில் முரசினை இசைப்பவனுக்கு மானிய உதவியும் செய்யப்பட்டுள்ளது. கோயில் பணியாளர்களுக்கான தேவை கருதி செயல்பட்டுள்ள தகவல் பழந்தமிழரின் நிர்வாகத் திறனை உணர்த்துகின்றது.

## வரி

மன்னர்களின் காலத்தில் சமூக கட்டமைப்புக்கு வரி வருமானம் முதன்மை ஆதாரமாகத் திகழ்ந்தது. கிராமத்தில் இருந்து பெறப்படும் வரியில் இருந்து கோயிலுக்குச் செலவுச் செய்யப்பட்டது. மகன்மைக்கும் வரி பெற்றுள்ள தகவல் கிடைக்கின்றது. இரட்டை வரி விதிப்பு முறையும் ஒரு கல்வெட்டில் பதிவிட்டுள்ளனர். கோயிலுக்காக வாங்கப்படும் அல்லது விற்கப்படும் நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்துள்ளனர்

## ஆடல் மகளிரின் பங்களிப்பு

ஆடல் மகளிருக்கு கோயில்களில் சிறப்பாள இடம் தரப்பட்டுள்ளது. அவர்களுக்கான மதிப்பும் மரியாதையும் காணப்படுகின்றது. ஆடல் மகளிர் கோயில் விளக்கு ஏற்றுவதற்குப் பணம் கொடையாக வழங்கியுள்ளனர். கோயில் பூந்தோட்டத்தினைப் பராமரிக்கும் ஊழியர்களுக்கு ஆடல் மகளிர் செலவு செய்துள்ளனர்.

## சிறப்புத் தரவுகள்

- கோயிலைப் பழுது பார்க்க பணம் வழங்கப்பட்டதும் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.
- சிவபிராமணர்களுக்கு கோயில் வழிபாட்டு முறைகளுக்கு கொடுக்கப்பட்ட உரிமையை அறியமுடிகின்றது.

- கிராமத்து மகா சபைக்கு ஆண்டுதோறும் 12 ஆண்கள் துலா மாதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள செய்தி பழங்கால அரசியல் அமைப்பினைக் கூறுகின்றது.
- வேதம் கற்றுக்கொடுக்கப்படும் நபருக்கு மானியம் வழங்கப்பட்ட செய்தி இடம் பெற்றுள்ளது.
- சிவ பிராமணர்களுக்கு அரசி பணம் கொடுத்துள்ள தரவும் பெறப்பட்டுள்ளது

## பூஞ்சோலை

இறை வழிபாடுகளுக்கு மலர்கள் தேவைப்படுவதால் பல கல்வெட்டுகளில் பூஞ்சோலை கொடையாக அளிக்கப்பட்ட தரவு இடம் பெற்றுள்ளது. கோயிலுக்கு நகைஆசாரி பூந்தோட்டம் வாங்கித் தந்துள்ளார். மேலும் ஊர் தலைவர் பூந்தோட்டம் அமைக்க நிலம் வாங்கித் தந்துள்ளார்.

## முடிவுரை

நிலம் விற்கப்பட்டதும் வாங்கப்பட்ட தரவுகளும் கிடைக்கின்றன. கோயிலுக்குப் பொன்னும், பொருளும் விளை நிலங்களும் கால்நடைகளும் கொடையாக அளித்துள்ளனர். கோயில்களின் நாள் வழிபாட்டுக்கும், திருப்பணிகளுக்கும், சிறப்பு வழிபாட்டிற்கும், பிரசாதம் வழங்குவதற்கும் தேவையான பொருளாதாரத் தேவையினை ஏதோ ஒரு வழியில் ஈடு செய்து மக்களுக்கு வேண்டிய சமயத் தேவையினை இக்கோயில் நிறைவேற்றி இருந்துள்ளதைக் கல்வெட்டுகள் சிறப்பாக முன்வைக்கின்றன.

## References

Mahalingam, T.V., (1991) A Topographical List of Inscriptions in the Tamil Nadu and Kerala States: Tiruchchirappalli District, The University of Michigan, USA.

Venkatasamy Nattar, N.M., (2018) Avvaiyarin Moodhurai, Manivaasagar Pathippagam, Chennai, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

S.P. Salavanisree, Lifestyle that is Shared by "Silasaasanam", Indian Journal of Multilingual Research and Development, Vol 3, Iss S-1 (2022) 68-72. DOI: https://doi.org/10.54392/ijmrd223S114